# முன்னுரை

## தொடக்கமும், ஆய்வுப் பொருளும்

**இந்திய இலக்கியங்கள்:-** சிறு சிறுகதைகளாய் மக்களால் பேசப்பட்டவைகள் காலப் போக்கில் ஒன்று திரட்டப்பட்டு, புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்களில் இடம் பிடித்தன. அப்பொழுது அக்கதைகள் தான் தனித்தன்மையை இழந்ததால் கிளைக் கதைகளாய் கருதப்பட்டன. கதைக்குள் கதை என்றும் வர்ணிக்கப்பட்டது.

இதிகாசத்தில் பழையதும் ஆதிகாவியம் எனப் போற்றப்படுவதுமான இராமயணத்தில் பல கிளைக்கதைகள் இடம் பெற்றுள்ளன. அவை இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள கதைமாந்தர்களை உயர்வு படுத்துவதற்காகவும் அல்லது தாழ்வு படுத்துவதற்காகவும் எடுத்தாளப் பட்டவைகளாகும். அக்கதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு விதமாக மாறுபட்ட அமைப்பில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு வரும் கதைகளில் ஒன்றான் அகலிகையின் கதையினை ஆய்வு செய்திட முனைந்துள்ளேன்.

## ஆய்வின் நோக்கம்:-

வான்மீகியின் காலம் முதல் இன்று வரை எழுத்தாளர்களாலும் புலவர்களாலும் எழுதப்படும் கதை அகலிகை கதையாகும். அகலிகை கதை இராமனின் பெருமைக்குச் சான்றாக அமைந்தாலும் இந்திரனின் தகாத செயலுக்காவும், அகலிகை என்ற பெண் பாத்திரத்தின் சபலத்தால் ஏற்பட்ட கற்பின் சிதறலுக்கும் காரணமாக அமைந்த கதையாகும்.

அகலிகை இந்திரனை தெரிந்தே ஏற்றுக் கொண்டாளா? கௌதமன் அகலிகைக்கு இட்ட சாபம் என்ன? உருவமற்றவளாக அல்லது கல்லாகுமாறு அல்லது நதியாகுமாறு, சாம்பலில் கிடந்து யார் கண்ணிலும் தெரியாமல் தவம் செய்யுமாறு சாபம் இட்டாரா? இந்திரனுக்கு இட்ட சாபம் என்ன? உடல் முழுதும் அவன் விரும்பி வந்த உறுப்பின் தோற்றமா? பீஜம் அறுந்து விழுந்து ஆண்மையை இழக்கும்படியாகவா? என்பதும் அகலிகை கல்லாக இருந்து பெண்ணாக மாறிய இடம் இராமனைக் காப்பாற்ற உதவிய இடமா? கௌதமனுடன் சேர்ந்து வாழ்ந்த கௌதமரின் ஆசிரம இடமா? அகலிகை வாழ்ந்த காலச் துழல் வேதகாலமாகவும் வட இந்திய மக்களின் ஆண் பெண் சேர்ந்த குடும்ப வாழ்வில் ஏற்பட்ட கட்டுப்பாடு-கள் மாறிக் கொண்டு வந்த காலமாகவும் தெரிவதால் அகலிகையின் செயலில் தவறு உண்டா? என்பதை ஆய்வு செய்வதே என் நோக்கமாகும்.

**கருதுகோள்:-**

ஒரு காலத்தில் தோன்றிய கருத்து ஒன்று பலகாலத்திலும், காலத்திற்கு ஏற்ற மாறுபாட்டினை ஏற்றுக்கொண்டு அதே சமயத்தில் தன் பழைய கருத்திலிருந்து மாறாமல் எப்படி இருந்துள்ளது ஆதிகாவியம் முதல் இன்று வரை பல கதைகளாகவும், கட்டுரையாகவும், திறனாய்வாகவும் வரக் காரணம் என்ன என்று ஆய்வதே என் கருதுகோளாகும்.

முன் நிகழ்ந்த ஆய்வுகள் :-

இந்திய இலக்கியங்களில் அகலிகை என்ற ஆய்வு இதற்கு முன் யாரும் செய்யவில்லை, அகலிகை கதையின் போக்கினை காலத்திற்கு ஏற்பமாற்றி அமைத்துக் கொண்ட கட்டுரைகளும், கவிதைகளுமே இதற்கு முன் வெளிவந்துள்ளன. ஆதனால் வேறு எந்த திறனாய்வு நூலும் இல்லை.

ஆய்வின் அடிப்படை :-

ஆய்வின் அடிப்படை இரு வகைப்படும்.

1) முதன்மை ஆதாரம்

2) துணை ஆதாரம்

முதன்மை ஆதாரம் :-

இந்திய மொழிகளால் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வரும் இராமாயணக் கதைகள் வெள்ளக்கால் சுப்பிரமணியம் எழுதிய அகலிகை வெண்பா.

துணை ஆதாரம் :-

1. அகலிகை, சாபவிமோசனம் என்ற இரண்டு புலமைப்பித்தனின் கட்டுரைகள்

2. கைலாசபதியின் அடியும் முடியும் கட்டுரை

3. மலர்களில் வெளிவந்த கட்டுரைகள்

4. அகலிகை பற்றி எழுதப்பட்ட நூல்கள் சித்திரைக்கலை பற்றி எழுதப்பட்ட நூல்கள்

5. பண்டைய கால இந்தியா பற்றி எழுதப்பட்ட நூல்கள்

6. தற்கால இலக்கியங்கள், கட்டுரைகள்

ஆய்வு எல்லை:-

புராணம், தற்கால இலக்கியம், கட்டுரைகள், சித்திரக் கலை, முதலிய இந்திய இலக்கத்தில் அகலிகையின் கதையானது எவ்வாறு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை ஆய்வு எல்லையாகக் கொண்டுள்ளேன்.

அணுகுமுறை:-

இந்த ஆய்வு ஒரு கதையின் கருப்பொருள் எவ்வாறு காலத்திற்கு ஏற்ப இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. அதனால் சமூகத்தில் எவ்வித வாழ்வியல் தாக்கம் ஏற்பட்டது என்பதை ஆய்வதே ஆய்வின் அணுகுமுறையாகும்.

ஆய்வுப் பகுப்பு:-

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை என்னும் பகுப்புகளுடன் கீழ்வருவனவும் இணைய அமைந்துள்ளது.